


கொரோனாவிலிருந்து மீட்டது முதல் தமிழ்நாட்டின் பெயரைக் காத்தது வரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு சாதனைகளை விளக்கி சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி ராயப்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் மதன் மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், நா.ராமலிங்கம், ச.பரமசிவம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி ஆகியோர் நேற்று (8.05.2023) சென்னையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் 2023க்கான ”வீரன் சின்னத்துடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.05.2023) சென்னையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் 2023க்கான ”வீரன் சின்னம் மற்றும் கருப்பொருள் பாடலை வெளியிட்டார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.

### இரண்டாண்டுகளில் பல்வேறு திட்டங்களை வழங்கி

# மக்களின் முன்னேற்றத்திற்காக செயலாற்றி வருகிறது திராவிட மாடல் அரசு!

## பெரியகுளம் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



தேனி, மே 9-

தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் நகர கழகம் சார்பாக, கழக தலைவர்-முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் பெரியகுளம் வடகரை புதிய பேருந்து பிரிவில் நடந்தது.

சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்திற்கு பெரியகுளம் நகரச் செயலாளர் முகமது இலியாஸ் தலைமை தாங்கினார்.

மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.டி.செல்லப் பாண்டி முன்னிலை வகித்தார். தேனி வடக்கு மாவடச் செயலாளர் தங்க தமிழ்செல்வன், சரவணக் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் இரண்டு ஆண்டு சாதனை குறித்து பேசினர்.

கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசுகையில், முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடந்துவருகிறது. திராவிட மாடல் அனைவரும் சமம் என்ற கொள்கையை முன் வைத்து செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கூட நீதிபதி ஆகலாம். நீதி துறையில் பணியாற்றலாம் என்று இன்று கழகம் நிரூபித்து வருகிறது.

சத்துணவுடன் கலைஞர் முட்டைவழங்கினார். நமது முதலமைச்சர் பள்ளி, மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு திட்டத்தை அறிவித்து பாமர மக்களும் கல்வி திறம்பட பயில செயல்படுத்துகிறார். மேலும் இதற்காக ரூ 500 கோடி நிதியும் ஒதுக்கப் பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளில் பல லட்சம் பேர்களுக்கு முதியோர் பென்சன் வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி பெறும் மாணவிகளுக்கு மாதந் தோறும் ரூ1000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நான் முதல்வன் திட்டம், சாலை விபத்தில் காயம் பட்டவர்களுக்கு 48 மணிநேரம் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்காக நிதி உதவி, பொதுமக்களுக்கு சாலைவசதிக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சி தனிநபர் வளர்ச்சிக்கான ஆட்சியாக இருந்தது. முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்களின் முன்னேற்றத்திற்காக சிந்தித்து திட்டம் வழங்கி செயல்படுத்தி வருகிறது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி லட்சுமணன், மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லப் பாண்டி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன், திண்டுக்கல் தொ.மு.ச. பொதுச் செயலாளர் செந்தில், மாவட்ட துணை செயலாளர் செந்தில், பெரியகுளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.எம். பாண்டி, தேனி வடக்கு ஒன்றியச் செயலாளர் தேனி யூனியன் சேர்மன் சக்கரவர்த்தி, பெரியகுளம் யூனியன் சேர்மன் தங்கவேல், நகர துணை செயலாளர்கள் சேதுராமன், சரவணன் வாசுகி, பேரூராட்சி தலைவர்கள் பால் பாண்டி, நாகராஜ் மற்றும் பேரூர்ச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### கடந்த ஆண்டை விட தேர்ச்சி விகிதம் அதிகரிப்பு!

# பிளஸ் 2 தேர்வு முடிவுகள்: 94.03% பேர் தேர்ச்சி!

## மாணவர்கள் 91.45% - மாணவிகள் 96.38% தேர்ச்சி!

சென்னை, மே 9-

தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், கடந்தாண்டை விட தேர்ச்சி சதவீதம் அதிகரித்துள்ளது.

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் கடந்த மார்ச்13ம் தேதி முதல் ஏப்ரல் 3ம் தேதி வரை நடந்தது.

இந்நிலையில், 12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை, சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று வெளியிட்டார்.

கடந்தாண்டை விட தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது. மொத்தம் 94.03 சதவீதம் பேர் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். மாணவர்கள் 91.45 சதவீதமும், மாணவிகள் 96.38 சதவீதம் பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், தமிழ் பாடத்தில் இருவர் 100 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளனர்.

ஆங்கிலப்பாடத்தில் 15 பேரும், இயற்பியல் பாடத்தில் 812 பேரும் 100 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளனர். வேதியியல் பாடத்தில் 3 ஆயிரத்து 909 பேரும், உயிரியல் பாடத்தில் ஆயிரத்து 494 பேரும் முழு மதிப்பெண் பெற்றுள்ளனர். கணிதம் பாடத்தில் 690 பேரும், தாவரவியல் பாடத்தில் 340 பேரும், விலங்கியல் பாடத்தில் 154 பேரும் 100 சதவீத மதிப்பெண் பெற்றுள்ளனர். கணினி அறிவியலில் 4 ஆயிரத்து 618 பேரும், வணிகவியல் பாடத்தில் 5 ஆயிரத்து 678 பேரும், கணக்குப்பதிவியலில் 6 ஆயிரத்து 573 பேரும், பொருளியல் பாடத்தில் ஆயிரத்து 760 பேரும், கணினி பயன்பாடு பாடத்தில் 4 ஆயிரத்து 51 பேரும். வணிக கணிதம், புள்ளியல் பாடத்தில் ஆயிரத்து 1,334 பேரும் 100 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளனர்.

**விருதுநகர் மாவட்டம் முதலிடம்!**

12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், 97.85 சதவீத தேர்ச்சி பெற்று விருதுநகர் மாவட்டம் முதலிடத்தை பிடித்துள்ளது.

**326 அரசுப் பள்ளிகள் 100% தேர்ச்சி!**

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 7 ஆயிரத்து 533 மேல்நிலைப் பள்ளிகளில் 2 ஆயித்து 767 மேல்நிலைப் பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், இதில் 326 அரசு மேல்நிலைப்பள்ளிகளும் அடங்கும் என பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

**திண்டுக்கல் மாணவி சாதனை!**

பிளஸ்2 பொதுத் தேர்வில் அனைத்து பாடங்களிலும் முழு மதிப்பெண் பெற்று திண்டுக்கல்லைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளியின் மகள் நந்தினி சாதனை படைத்துள்ளார்.

சாதனை படைத்த மாணவி நந்தினியின் தந்தை சரவணகுமார் தச்சு தொழிலாளியாக உள்ளார். மாணவி நந்தினிக்கு ஊர் மக்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

### மணீஷ் காஷ்யப் மீதான தேச பாதுகாப்பு வழக்கு!

# ரத்து செய்ய உச்சநீதிமன்றம் திட்டவட்ட மறுப்பு!

## மணீஷ் காஷ்யப்புக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் கண்டனம்!

புதுடெல்லி, மே 9 -

மணீஷ் காஷ்யப் மீதான தேச பாதுகாப்பு வழக்கை ரத்து செய்ய உச்சநீதிமன்றம் திட்டவட்ட மறுப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் வடமாநிலத் தொழிலாளர்கள் தாக்கப் படுவதாக பொய் செய்திகள் மற்றும் வீடியோவை பரப்பிய பீகார் மாநிலத்தைச் சேர்ந்த யூடியூபர் மணீஷ் காஷ்யப் அண்மையில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். அவர் மீது தேச பாதுகாப்பு வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், தன் மீதான தேச பாதுகாப்பு வழக்கை ரத்து செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அமைதியான மாநிலம் என்றும், அமைதியான மாநிலத்தில் குழப்பத்தை ஏற்படுத்தவும், அமைதியை சீர்குலைக்கவும் முயற்சி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். போலி வீடியோக்களை பரப்பி அமைதியை சீர்குலைப்பதை ஏற்க முடியாது என்றும் தலைமை நீதிபதி கூறினார். புலம்பெயர் தொழிலாளர்கள் மத்தியில் பாதிப்பு வரக்கூடாது என்பதற்காகத்தான் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தலைமை நீதிபதி குறிப்பிட்டார். போலி வீடியோக்களை உருவாக்கியுள்ளதால் வழக்கை ரத்து செய்ய முடியாது என்று தலைமை நீதிபதி திட்டவட்டமாக தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கபில்சிபல், காஷ்யப் மீதான தேச பாதுகாப்பு வழக்கை ரத்து செய்யக் கூடாது என்றும், அவர் மீதான வழக்குகளை பீகாருக்கு மாற்றக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

இதனையேற்ற நீதிபதிகள், மணீஷ் காஷ்யப்பின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - முரசொலி மூர்த்தி சிறப்புரை!

# பம்மல் தெற்கு ஒன்றியத்தில் கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

## வே.கருணாநிதி தலைமை !பி.ஸ்ரீதர் சத்யா மதியழகன் வரவேற்புரை!

சென்னை மே 9-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (9-5-2023 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் நாகல்கேணியில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு பம்மல் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும் மண்டலக்குழு தலைவருமான வே. கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

வட்டக் கழக செயலாளர் பி.ஸ்ரீதர், சத்யாமதியழகன் எம்.சி. ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

பேராசிரியர் எல்.பிரபு, ப.காலேஸ்வரன், ஆர்.உமாசங்கர், என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா. கவிதா, பா.டில்லி, பி.ஜே. வேந்தன், என்.கே. ரவிச்சந்திரன், இரா. கந்தவேலு, ஆர். கோகுல், மதினா பேகம் எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழக குழு தலைவருமான டி.ஆர். பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளரும், சிறு, குரு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ. அன்பரசன், தலைமை கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் தலைமை தீர்மான குழு உறுப்பினர் மீ.அ. வைத்திலிங்கம், இ. கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், தலைமை கழக பேச்சாளர் முகமது இப்ராஹிம், பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், அ தமிழ்மாறன், எஸ். சதீஷ், இரா.நரேஷ் கண்ணா எம்.சி, எஸ்.கே. நெப்போலியன், வி. ரவிச்சந்திரன், பம்மல் மாசுரன், பா செல்வம், பி. எஸ்.ரவி, மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி, மூ. இன்ப சேகர், ரம்யா சத்திய பிரபு, வட்டச் செயலாளர்கள் அண்ணா வெங்கடேசன், வி எஸ்.ஜெகநாதன், என்.காந்தி, எம்.முகமது அப்பாஸ், எம். சாலா (எ)சுகுமாரன் உள்ளிட்ட மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை பம்மல் தெற்கு ஒன்றிய தி.மு.க செய்துள்ளது.பம்மல் நகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்திய பிரபு நன்றி கூறுகிறார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் சார்பில்

# திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள்!



மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில் கழக தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொது கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் விவரம் –**

**நாள் : 09.05.2023 / நேரம் : மாலை 6 மணி**

| இடம் | தலைமை | சிறப்பு பேச்சாளர் |
|---|---|---|
| செங்கல்பட்டு | எஸ். நரேந்திரன் | அமைச்சர் தா.மோ.அன்பரசன் |
| காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | வி.எஸ்.ஆராவமுதன் | வி.பி. கலைராஜன் |
| மறைமலைநகர் நகரம் | ஜெ. சண்முகம் | இறையன்பன் குத்தூஸ் |
| தாம்பரம் மேற்கு பகுதி | து.காமராஜ் | இ. பரந்தாமன் |
| செம்பாக்கம் தெற்கு பகுதி | இரா. சுரேஷ் | ஏ.எஸ்.கார்த்திக் (எ) சௌந்திரராஜன் |
| குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | படப்பை ஆ. மனோகரன் | சைதை மா. அன்பரன் |
| மாங்காடு நகரம் | எஸ். ஜபரூல்லா | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | எல். இதயவர்மன் | செந்தமிழ் அரசு |
| புனித தோமையார் மலை ஒன்றியம் | மூவரசம்பட்டு ரவி | இரா. கிரிராஜன், எம்.பி., |
| பல்லாவரம் தெற்கு பகுதி | இரா. பெர்னார்ட் | கே.எஸ். ரவிச்சந்திரன் |
| பம்மல் தெற்கு பகுதி | வே. கருணாநிதி | முரசொலி மூர்த்தி |
| ஆலந்தூர் தெற்கு பகுதி | என். சந்திரன் | பொன்னேரி சிவா |

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.